EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

# ஐ.நா. சீர்திருத்தமே உடனடித் தேவை

ஹிரோஷிமா, மே 21: ஐ.நா. அமைப்பில் சீர்திருத்தங்களைப் புகுத்துவதே உடனடித் தேவை என பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார்.

'தற்போதைய உலகின் எதார்த்தங்களைப் பிரதிபலிக்கவில்லை எனில், ஐ.நா. வெறும் பேச்சு மேடையாக மட்டுமே இருக்கும்' எனவும் பிரதமர் விமர்சித்தார்.

ஜப்பானின் ஹிரோஷிமா நகரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஜி7 மாநாட்டின் ஓர் அமர்வில் உரையாற்றிய பிரதமர் மோடி, 'உலக அமைதி, நிலைத்தன்மை உள்ளிட்டவை சார்ந்த சவால்களை எதிர்கொள்வதற்காகவே ஐ.நா. உருவாக்கப்பட்டது.

ஆனால், அத்தகைய சவால்களை ஐ.நா. தவிர பல்வேறு அமைப்புகள் எதிர்கொள்ள வேண்டிய காரணம் என்ன? பல்வேறு அமைப்புகளில் அமைதி, நிலைத்தன்மை குறித்துப் பேச வேண்டியிருப்பதன் அவசியம் குறித்த காரணத்தை ஆராய வேண்டும்.

உலகில் அமைதியை ஏற்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட ஐ.நா. அமைப்பு, தற்போதைய சண்டைகளைத் தடுக்கத் தவறியது ஏன்? 'பயங்கரவாதம்' என்ற சொல்லுக்கான விளக்கம்கூட ஐ.நா.-வில் இன்னும் ஏற்றுக்கொள்ளப்படாதது ஏன்?

## ஜி7 மாநாட்டில் பிரதமர் மோடி



கடந்த நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட ஐ.நா. அமைப்பால், 21-ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ள முடியவில்லை. தற்போதைய உலகின் எதார்த்தத்தை ஐ.நா. பிரதிபலிக்கவில்லை. அதன் காரணமாகவே, ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளில் சீர்திருத்தங்களைப் புகுத்த வேண்டியது உடனடித் தேவையாகிறது.

அத்தகைய சர்வதேச அமைப்புகள் தெற்குலகின் குரலையும் பிரதிபலிக்கும் வகையில் அமைய வேண்டும். அதுபோன்ற சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படாவிடில், ஐ.நா.வும், பாதுகாப்பு கவுன்சிலும் வெறும் பேச்சு மேடையாக மட்டுமே இருக்கும்' என்றார்.

**இந்தியாவின் வலியுறுத்தல்:** ஏறத்தாழ 75 ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட ஐ.நா. அமைப்பில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. முக்கியமாக, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று இந்தியா தெரிவித்து வருகிறது. ஜப்பான், தென் ஆப்பிரிக்கா, பிரேஸில் உள்ளிட்ட நாடுகளும் ஐ.நா. சீர்திருத்தத்துக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றன.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர்களாக உள்ள அமெரிக்கா, பிரிட்டன், ரஷியா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் இந்தியாவை நிரந்தர உறுப்பினராக இணைத்துக் கொள்ள ஆதரவு தெரிவித்து வருகின்றன. ஆனால், சீனா மட்டும் அதற்கு முட்டுக்கட்டை போட்டு வருகிறது.

## 'இயல்பு நிலையைத் தன்னிச்சையாக மாற்ற அனுமதிக்கக் கூடாது'

ஜி7 மாநாட்டின் ஓர் அமர்வில் பேசிய பிரதமர் மோடி, 'உக்ரைன் மோதலானது அரசியல், பொருளாதாரம் சார்ந்தது அல்ல. அது மனிதாபிமானம் சார்ந்தது. பிரச்னைகளுக்குப் பேச்சுவார்த்தை மூலம் மட்டுமே தீர்வு காண முடியும் என இந்தியா ஆரம்பத்தில் இருந்தே கூறி வருகிறது.

வங்கதேசத்துடனான எல்லைப் பிரச்னைக்குப் பேச்சுவார்த்தை மூலமாகவே இந்தியா தீர்வு கண்டது. உக்ரைன் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்குத் தேவையான அனைத்துவித நடவடிக்கைகளையும் இந்தியா மேற்கொள்ளும்.

ஐ.நா. விதிகள், சர்வதேச விதிகளை அனைத்து நாடுகளும் மதித்து நடக்க வேண்டும். மற்ற நாடுகளின் இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு அனைத்து நாடுகளும் மதிப்பளிக்க வேண்டும். இயல்பு நிலையைத் தன்னிச்சையாக மாற்ற முயற்சிக்கும் நடவடிக்கைகளை ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. அத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராக அனைத்து நாடுகளும் குரலெழுப்ப வேண்டும்.

தற்போதைய சர்வதேச சூழல் காரணமாக, வளர்ந்து வரும் நாடுகள் உணவு, எரிசக்தி, உரப் பாதுகாப்பு சவால்களைச் சந்தித்து வருகின்றன. சர்வதேச அமைதி, நிலைத்தன்மை, வளர்ச்சி ஆகியவை அனைத்து நாடுகளின் பொதுவான இலக்குகள். தற்போதைய ஒருங்கிணைந்த உலகில், குறிப்பிட்ட ஒரு பகுதியில் நிகழும் சண்டையானது, மற்ற பகுதிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். அத்தகைய மோதல்களால் வளர்ந்து வரும் நாடுகள் அதிகமாக பாதிக்கப்படும்.

நவீன உலகத்தின் பிரச்னைகளுக்குத் தேவையான அனைத்து தீர்வுகளும் புத்தரின் போதனைகளில் உள்ளன. புத்தர் காட்டிய பாதையில் அனைவரும் ஒருங்கிணைந்து பயணம் மேற்கொள்ள வேண்டும்' என்றார் பிரதமர் மோடி.

## UNITED NATIONS & ITS ORGANS

• It is an international organization founded in 1945 after the World War II.

• Its charter was signed in San Francisco on June 26, 1945 and came into existence on October 24, 1945 after 51 countries have signed the charter.

• Its predecessor, the League of Nations, created by the Treaty of Versailles in 1919 was disbanded in 1946.

• Its mission is to maintain international peace and security, developing friendly relations among nations and promoting social progress, better living standards and human rights.

1. HQ - New York
2. Official Languages - Arabic, Chinese, English, French, Spanish, Russian
3. Members - 193 (Latest Member South Sudan)
4. Secretary General - Antonio Guterres (Portugal)

**UN System is made up of the**

1. Main Organs established by the Charter of the United Nations,
2. Specialized agencies provided for in Article 57 of the Charter &
3. Funds & Programmes established by the General Assembly under its authority derived from Article 22 of the Charter.

**Indian Members in the UN**

- Soumya Swaminathan, director general of the Indian Council of Medical Research (ICMR), was appointed as the Chief Scientist at the WHO.
- An Indian Justice Dalveer Bhandari was re-elected as a judge to the International Court of Justice.
- International law expert Neeru Chadha was elected to the International Tribunal for the Law of the Sea.

**ஐக்கிய நாடுகள் மற்றும் அதன் உறுப்புகள்**

- இது இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு 1945 இல் நிறுவப்பட்ட ஒரு சர்வதேச அமைப்பாகும்.
- அதன் சாசனம் ஜூன் 26, 1945 இல் சான் பிரான்சிஸ்கோவில் கையெழுத்திடப்பட்டது மற்றும் 51 நாடுகள் சாசனத்தில் கையெழுத்திட்ட பிறகு அக்டோபர் 24, 1945 இல் நடைமுறைக்கு வந்தது.
- அதன் முன்னோடியான லீக் ஆஃப் நேஷன்ஸ், 1919 இல் வெர்சாய்ஸ் உடன்படிக்கையால் உருவாக்கப்பட்டது, 1946 இல் கலைக்கப்பட்டது.
- சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பைப் பேணுதல், நாடுகளுக்கிடையே நட்புறவை வளர்த்தல் மற்றும் சமூக முன்னேற்றம், சிறந்த வாழ்க்கைத் தரம் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல் ஆகியவை இதன் நோக்கமாகும்.

1. தலைமையகம் - நியூயார்க்
2. அதிகாரப்பூர்வ மொழிகள் - அரபு, சீனம், ஆங்கிலம், பிரஞ்சு, ஸ்பானிஷ், ரஷ்யன்
3. உறுப்பினர்கள் - 193 (சமீபத்திய உறுப்பினர் தெற்கு சூடான்)
4. பொதுச் செயலாளர் - அன்டோனியோ குட்டரெஸ் (போர்ச்சுகல்)

**ஐ.நா அமைப்பு**

1. ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தால் நிறுவப்பட்ட முக்கிய உறுப்புகள்,
2. சாசனத்தின் பிரிவு 57 இல் வழங்கப்பட்டுள்ள சிறப்பு முகமைகள் &
3. சாசனத்தின் பிரிவு 22ல் இருந்து பெறப்பட்ட அதன் அதிகாரத்தின் கீழ் பொதுச் சபையால் நிறுவப்பட்ட நிதிகள் மற்றும் திட்டங்கள்.

EVA STALIN IAS ACADEMY

## ஐ.நா.வில் இந்திய உறுப்பினர்கள்

- இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் (ICMR) இயக்குநர் ஜெனரல் சௌமியா சுவாமிநாதன் WHO வின் தலைமை விஞ்ஞானியாக நியமிக்கப்பட்டார்.
- இந்திய நீதிபதி தல்வீர் பண்டாரி சர்வதேச நீதிமன்றத்தின் நீதிபதியாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- • சர்வதேச சட்ட நிபுணர் நீரு சாதா கடல் சட்டத்திற்கான சர்வதேச தீர்ப்பாயத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

# முதல் சுதந்திரப் போராட்டம் தொடங்கியது தமிழகத்தில்தான்

## ஆளுநர் ஆர்.என்.ரவி பெருமிதம்

**சென்னை, மே 21:** நாட்டில் முதல் சுதந்திர போராட்டம் தொடங்கியது தமிழகத்தில் தான் என்று ஆளுநர் ஆர்.என். ரவி பெருமிதத்துடன் தெரிவித்தார்.

சென்னை கிண்டி ஆளுநர் மாளிகையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 'எண்ணித்துணிக' நிகழ்ச்சியில் 5- ஆவது பகுதியில் முன்னாள் படை வீரர்கள் மற்றும் வீரதீரச் செயலுக்கான பதக்கம் பெற்றவர்களுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் ஆளுநர் ஆர்.என். ரவி பேசியது:

நாட்டில் ராணுவ வீரர்களுக்கு கிடைக்க வேண்டிய பாராட்டுகள் முழுமையாகக் கிடைப்பதில்லை.

தமிழ்நாடு ஆன்மிகத்தின் தலைநகரம் மட்டுமல்லாது, நாட்டில் சுதந்திரப் போராட்டத்தை முதலில் தொடங்கிய மாநிலமாகவும் உள்ளது.

வலிமையான நாடு என்றால் வலிமையான ராணுவம் இருக்க வேண்டும். அதுதான் நாட்டுக்குப் பெருமை. ராணுவப் பணி என்பது ஒரு வேலை இல்லை, நாட்டுக்காக அர்ப்பணிக்கும் செயல் ஆகும்.



கிண்டி ஆளுநர் மாளிகையில் ஞாயிற்றுக்கிழமை 'எண்ணித் துணிக' நிகழ்ச்சியில் முன்னாள் படை வீரர்கள் மற்றும் வீரதீரச் செயலுக்கான பதக்கம் பெற்றவர்களுடன் கலந்துரையாடிய ஆளுநர் ஆர்.என்.ரவி.

போர்க் காலங்களில் ஒட்டுமொத்த நாடும் ராணுவத்தின் பின் நிற்கிறது. ஆனால், அமைதி காலங்களில் ராணுவத்தை யாரும் பாராட்டுவதில்லை. ஓய்வுக்குப் பின்னாலும் நாட்டின் அளவிட முடியாத சொத்தாக ராணுவ வீரர்கள் உள்ளனர்.

தமிழகத்தில் எந்த மாவட்டத்துக்கு நான் சென்றாலும் முன்னாள் ராணுவ வீரர்களைச் சந்தித்து வருகிறேன்.

நீண்ட நாளாக எனக்கு ஒரு யோசனை உள்ளது. தமிழகத்தில் உயிரிழந்த ராணுவ வீரர் எந்தப் பகுதியைச் சார்ந்து உள்ளாரோ அந்தப் பகுதியில் உள்ள பள்ளியில் அவரது புகைப்படத்தை வைத்து எந்தப் போரில் அவர் உயிர் இழந்தார், அவரது வரலாறு உள்ளிட்ட விவரங்களை எழுதி வைக்க வேண்டும்.

அந்த ராணுவ வீரர் உயிர்த் தியாகம் செய்த நாளில் அந்தப் பகுதி மக்களை அழைத்து புகழ் வணக்க நிகழ்ச்சி நடத்த வேண்டும்.

ஓய்வு பெற்ற ராணுவ வீரர்களை கௌரவமாக நடத்த வேண்டும். முன்னாள் ராணுவ வீரர்களுக்கான குறைகள், பிரச்னைகள் ஆகியவை தொடர்பாக மத்திய அரசுக்கு கடிதம் எழுதுவேன் என்றார் அவர்.

முன்னதாக முன்னாள் படை வீரர்களான சாமிநாதன், கணேசன், நடராஜன், பாலதண்டாயுதன், மறைந்த ராணுவ வீரர்களின் மனைவிகள் ஷோபா சுதாகர், வேதவல்லி விநாயக், குமாரி, வானதிதேவி உள்ளிட்டோருக்கு பொன்னாடை அணிவித்து சான்றிதழ் வழங்கிப் பாராட்டினார்.

இந்த நிகழ்ச்சியில் லெப்டினல் கர்னல் என்.டி.ராஜன், ஆளுநர் மாளிகை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# சந்திரயான்-3 விண்கலம்: விரைவில் விண்ணில் ஏவத் திட்டம்



சென்னை, மே 21: நிலவை ஆய்வு செய்யும் 'சந்திரயான்-3' விண்கலத்தை 'ஜிஎஸ்எல்வி மார்க்-3 ராக்கெட்' மூலம் ஜூலை மாதம் விண்ணில் ஏவத் திட்டமிட்டுள்ளதாக இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) நிலவை ஆய்வு செய்வதற்காக, 2008-ஆம் ஆண்டு சந்திரயான் -1 விண்கலத்தை அனுப்பியது. அந்த விண்கலம் நிலவின் மேற்பரப்பை சுற்றிவந்து ஆய்வு செய்தது. அப்போது, நிலவில் தண்ணீர் இருப்பதற்கான ஆதாரங்கள் உறுதி செய்யப்பட்டன.

'சந்திராயன்-1' வெற்றி பெற்றதையடுத்து, நிலவில் தரையிறங்கி ஆய்வு செய்யும் திட்டத்தை செயல்படுத்த இஸ்ரோ முடிவு செய்தது.

இதற்காக நவீன நுட்பத்தில் சந்திரயான்-2 விண்கலம் உருவாக்கப்பட்டது. அந்த விண்கலம் 'ஜிஎஸ்எல்வி மார்க்-3 ராக்கெட்' மூலம் 22.6.2019-இல் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து விண்ணில் ஏவப்பட்டது.

பல்வேறு கட்ட பயணங்களுக்கு பிறகு 'சந்திரயான்-2' அந்த ஆண்டு செப்டம்பரில் நிலவின் சுற்றுப் பாதையை சென்றடைந்தது. இருப்பினும், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக திட்டமிட்டபடி லேண்டர் கலன் தரையிறங்காமல் செயலிழந்தது.

அதேநேரத்தில், விண்கலத்தின் மற்றொரு பகுதியான 'ஆர்பிட்டர்', நிலவின் சுற்றுப் பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது. தற்போது அந்த 'ஆர்பிட்டர்' நிலவைச் சுற்றிவந்து ஆய்வு செய்து வருகிறது.

இந்த நிலையில், 'சந்திரயான்-3' திட்டத்தை சுமார் ரூ.615 கோடியில் செயல்படுத்த 2020-ஆம் ஆண்டு இஸ்ரோ முடிவு செய்தது.

ஏற்கெனவே 'ஆர்பிட்டர்' நிலவைச் சுற்றி வருவதால் இந்த முறை லேண்டர் மற்றும் ரோவர் கலன்களை மட்டும் அனுப்புவதற்கு திட்டமிடப்பட்டது.

கடந்த 3 ஆண்டுகளாக இதற்கான ஆய்வுப் பணிகளில் விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டு வந்தனர். பல்வேறு சோதனைகளும் மேற்கொள்ளப்பட்ட பிறகு 'சந்திரயான்-3' விண்கலம் ஜூலை மாதம் விண்ணில் ஏவப்பட உள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இது குறித்து இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறியதாவது: 'சந்திரயான்-3' திட்டத்துக்காக மேம்படுத்தப்பட்ட அதிநவீன வசதிகளுடன் லேண்டர், ரோவர் கலன்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த முறை விண்கலத்தில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

'சந்திரயான்-3' விண்கலத்தை 'ஜிஎஸ்எல்வி மார்க்-3 ராக்கெட்' மூலம் ஜூலை 2-ஆவது வார இறுதியில் விண்ணில் ஏவ திட்டமிடப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக லேண்டர் கலனை நிலவில் தரையிறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கான இறுதிக்கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மற்றொருபுறம், 'என்விஎஸ்-2' எனப்படும் நேவிகேஷன் (வழிகாட்டுதல்) செயற்கைக் கோளினை 'ஜிஎஸ்எல்வி மார்க்-3' ராக்கெட் மூலம் மே 29-ஆம் தேதி விண்ணில் ஏவ இஸ்ரோ திட்டமிட்டுள்ளது என்றனர்.

## GSLV MkIII

- GSLV MkIII, chosen to launch Chandrayaan-2 spacecraft, is a three-stage heavy lift launch vehicle developed by ISRO. The vehicle has two solid strap-ons, a core liquid booster and a cryogenic upper stage.

- GSLV Mk III is designed to carry 4 ton class of satellites into Geosynchronous Transfer Orbit (GTO) or about 10 tons to Low Earth Orbit (LEO), which is about twice the capability of the GSLV Mk II.

- The first developmental flight of GSLV Mk III, the GSLV-Mk III-D1 successfully placed GSAT-19 satellite to a Geosynchronous Transfer Orbit (GTO) on June 05, 2017 from SDSC SHAR, Sriharikota.

- GSLV MkIII-D2, the second developmental flight of GSLV MkIII successfully launched GSAT-29, a high throughput communication satellite on November 14,

2018 from Satish Dhawan Space Centre SHAR, Sriharikota

- GSLV MkIII-M1, successfully injected Chandrayaan-2, India's second Lunar Mission, in to Earth Parking Orbit on July 22, 2019 from Satish Dhawan Space Centre SHAR, Sriharikota

**Significance**

- It strengthens INDIA's soft power diplomacy
- It reduces our dependency on foreign launch vehicles
- It has multiplier effect on other innovations like chandrayan 2,human space flights etc
- It leads to commercial
- Self- reliance

EVA STALIN IAS ACADEMY